## மது வரி வெகுமதி நிதியம் - 2015

இலங்கை மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1994 மார்ச் 4 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1(iii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு முரணாக காசு அடிப்படையில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ரூபா 47,134,000 கிரயமான கட்டிடத்திற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு உரிய சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கைத்தொழில் குற்றங்களைத் தீர்க்கும் வரை அதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பான ரூபா 185,000 தொகை பொறுப்பொன்றாகக் காண்பிப்பதற்குப் பதிலாக வருமானமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற புகையிலை வெகுமதி நிதியம் தாபிக்கப்பட்டு புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 1/4 பங்கு புகையிலை வெகுமதி நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், புகையிலை நிதியமொன்று தயாரிக்கப்படாது புகையிலை தண்டப்பணப் பெறுவனவுகள், மது வரி வெகுமதி நிதியத்தின் கீழ் புகையிலை வெகுமதி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையாக கணக்கீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிதியத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் விஷேட நிபந்தனை (v), (vi) | சுற்றி வளைப்புக்காக நேரடியாக தொடர்புபடுகின்ற உத்தியோகத்தருக்கு அரையாண்டு செலுத்தக்கூடிய வெகுமதித் தொகை அந்த உத்தியோகத்தர்களின் 06 மாத சம்பளத்தை விஞ்ச முடியாதிருந்த போதிலும், 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய வெகுமதிப் பணம் ரூபா 30,763,997 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 79,009,718 மிகையாக இருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 63,375,039 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 15,634,679 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. இணக்க கட்டணப் பெறுவனவுகள் ரூபா 15,406,633 அளவினால் அதிகரித்திருந்தமை மிகையின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கங்களாக,

* மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல் வழங்குனர்கள் மற்றும் ஏனையோருக்கு வெகுமதித் தொகை செலுத்துதல்.
* பயிற்சியளித்தல் மற்றம் கல்விச் செயற்பாடுகளுக்கு பணத்தை வழங்குதல்
* ஆண்டிற்கு ரூபா 50,000 எல்லையின் கீழ் மதுவரித் திணைக்களத்தின் பதவியணியினரின் விளையாட்டு, களியாட்ட மற்றும் நலன்புரி வேலைகளுக்கு பணம் வழங்குதல்
* மதுவரித்திணைக்களத்திற்கு தேவையான பொருட்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்தல்
* பாராட்டக்கூடிய வேலைகள், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விஷேட ஏற்றுக் கொள்ளல் போன்ற வேறு செயற்பாடுகளுக்கும் வெகுமதித் தொகை செலுத்துதல், மற்றும்
* விஷேட கடமைகள் அல்லது விஷேட சுற்றிவளைப்புக்களுக்காக பிரதேசங்களில் சுற்றி வளைப்புக்களில் ஆளணியினரை ஈடுபடுத்தும் போது திணைக்களத்திற்கு செய்யவேண்டியேற்பட்ட செலவினங்களைத் தீர்த்தல் போன்றன காண்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 4,932 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 178,507,964 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது 5,319 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 163,101,331 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புகளிலிருந்தான வருமானம் ரூபா 15,406,633 தொகை அல்லது 09 சதவீதமான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை 387 இனால் அதாவது 7 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த பாதீட்டின் பிரகாரம் வெகுமதிப் பணம் செலுத்துவதற்காக ரூபா 108,750,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாவாண்டின் போது ரூபா 65,523,136 மாத்திரம் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 43,226,864 தொகை அல்லது 40 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. வெகுமதி நிதியத்தின் பிரதான நோக்கம் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக்களைச் செய்வதாக இருந்த போதிலும் அந்த நோக்கங்கள் நிதியத்தினால் நிறைவேற்றப்பட்டதா என கணக்காய்வில் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விஷேட கடமைகள் அல்வது விஷேட சுற்றி வளைப்புக்கள் பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளில் முறையே ரூபா 800,000 தொகை மற்றும் ரூபா 4,000,000 தொகைகளாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 18,690 தொகை மற்றும் ரூபா 926,947 தொகை செலவிடப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் விஷேட கடமைகள் அல்லது விஷேட சுற்றி வளைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 781,310 தொகை அல்லது 98 சதவீதமும் பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 3,073,053 அல்லது 77 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தின் பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளின் கீழில்லாத மதுபான நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்கு பற்றுபவர்களுக்கு உணவு வழங்கல் மற்றும் உரித்தான ஏனைய செலவினங்களுக்காக ரூபா 314,898 தொகை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4.5 ஆம் பிரிவின் படி துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளுக்கு வருடாந்தம் ரூபா 200,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீனாய்வாண்டின் போதும் மதுவரி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் அவ்வாறான செயற்பாடுகளுக்காக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தொழிற்சங்க தலைவர்களுக்காக 2 நாட்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு பயிற்சிப் பெறுநர்களுக்கு கொடுப்பளவு மேற்கொள்ளும்போது செயலமர்விற்கு சமூகமளிக்காத நபர்களுக்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 67,037 தொகை சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 97,113 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் இருப்பொன்று 3 வருட காலமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கையைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மதுவரி வெகுமதி நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல் வழங்குபவர்கள் மற்றும் ஏனையவர்களுக்குரிய வெகுமதிகளைச் செலுத்ததல் மற்றும் துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விஷேட ஏற்றுக்கொள்ளல்களுக்காக தகுதியான உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூல நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | வருமானத்தையும் செலவினத்தையும் கணக்கீடு செய்யும் போது அட்டுறு அடிப்படை பின்பற்றல் |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நிதியத்தினதும் திணைக்களத்தினதும் சொத்துக்களைத் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாட்டை சரியாக மேற்கொள்ளல் |